**IN THE COURT OF DISTRICT MUNSIF, T. VADIPATTI, MADURAI DISTRICT**

| | | | | |
|---|---|---|---|---|
| | | O.S. No. | : | **138/2022** |
| | | P/W's | : | **PW1** |
| DEPOSITION OF WITNESS | | | : | |
| NAME | ஹரிஹரபோஸ் | CASTE | : | |
| S/O | அய்யாக்கண்ணுத்தேவர் | RELIGION | : | இந்து |
| VILLAGE | பெருமாள்பட்டி, குலசேகரன் கோட்டை | CALLING | : | |
| TALUK | வாடிப்பட்டி | AGE | : | **80** |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 09.04.2026**

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

1. எனது தாத்தாவிற்கும், அப்பாவிற்கும், சித்தப்பாவிற்கும் பாத்தியப்பட்ட சொத்தில் பிரதிவாதி ஆக்கிரமிப்பு செய்து அதை அகற்ற உத்தரவிடுமாறு வழக்கு தாக்கல் செய்துள்ளேன். வழக்கு சொத்தில் நான் அனுபவத்தில் இல்லை என்றால் சரிதான். தற்போது வழக்கு சொத்தை பிரதிவாதி அனுபவம் செய்து வருகிறார். வழக்கு சொத்திற்கான வருவாய் ஆவணங்கள் பிரதிவாதி பெயரில் உள்ளது என்றால் சரியல்ல. பிரதிவாதிகளின் எதிர் வழக்கு உரையை எனது வழக்கறிஞர் படித்து காட்டினார்.

2. எதிர் வழக்கு உரையில் வருவாய் ஆவணங்கள் பிரதிவாதி பெயரில் உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. பிரதிவாதி பெயரிலுள்ள வழக்கு சொத்தின் வருவாய் ஆவணங்களை எதிர் வழக்கு உரையுடன் தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். 2021ம் ஆண்டு தான் வழக்கு சொத்தை அளந்தபோது பிரதிவாதி ஆக்கிரமிப்பு செய்துள்ளது எனக்கு தெரிய வந்தது. நான் மேற்சொன்ன சங்கதிகளை எனது வழக்கு உரையில் குறிப்பிட்டுள்ளேன். 2021ம் ஆண்டு தான் ஆக்கிரமிப்பு பற்றி தெரியும் என்று வழக்கு உரையில் குறிப்பிட்டுள்ளதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

3. பிரதிவாதி 2021ம் ஆண்டுக்கு முன்பிருந்தே வழக்கு சொத்தை அனுபவம் செய்யும் விவரம் எனக்கு தெரியும் என்றாலும் வழக்கிற்காக அதை மறுத்து சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. பிரதிவாதியின் ஆக்கிரமிப்பு பற்றி தெரிந்த பின் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பி அதன் பின் இந்த வழக்கை தாக்கல் செய்தேன்.

வா.சா.ஆ.4 வழக்கறிஞர் அறிவிப்பில் சம்பந்தமில்லாத நபர்களிடம் பிரதிவாதி சொத்தை கிரையம் பெற்றதாக குறிப்பிட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி பிரதிவாதி கிரையம் பெற்றதாக எனது வழக்கறிஞர் அறிவிப்பில் தவறாக குறிப்பிடப்பட்டுள்ளது, பிரதிவாதி ஆக்கிரமிப்பு தான் செய்துள்ளார்.

4. எனது வழக்கறிஞர் அறிவிப்புக்கு பிரதிவாதி பதில் அனுப்பினாரா என்று எனக்கு தெரியாது. பிரதிவாதி பதில் அனுப்பினார் என்றாலும் அதை தெரிந்து கொண்டே வழக்கிற்காக மறுத்து சொல்கிறேன் என்றால் சரியல்ல. பிரதிவாதி 40 ஆண்டுகளாக வழக்கு சொத்தை அனுபவம் செய்கிறார்கள் என்றாலும் அதை இடையூறு செய்ய இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல. நான் பிரதிவாதியின் ஆக்கிரமிப்பை அகற்ற வேண்டும் என்று வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றாலும் வழக்கு சொத்து எனது அனுபவத்தில் இருப்பதை போல் தவறான சங்கதிகளை சொல்லி நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் தான் கேட்டுள்ளேன் என்றாலும் அதனால் வழக்கு தள்ளுபடி செய்யதக்கது என்றாலும் சரியல்ல.

சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

//True copy//
Sd/– M.P. Ramkishore
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
வாடிப்பட்டி.